# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை - 2023

| தரம் - 11 | தமிழ்மொழியும் இலக்கியமும் - I | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ................................................................................

**அறிவுறுத்தல்கள் :**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மறறைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

❖ **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(1) ‘சூழ மேதி யிறங்குந் துறையிற்’ இங்கு **மேதி** என்பது
(1) யானை (2) எருமை (3) குளம் (4) மீன்

(2) ‘படரெலாம் படைத்தாளை’ இங்கு **படர்** என்பது
(1) இன்பம் (2) இரக்கம் (3) துன்பம் (4) சத்தியம்

(3) ‘பிரசண்ட மாருதம்’ இங்கு சண்ட **மாருதம்** என்பதன் எதிர்க்கருத்து
(1) சூறாவளி (2) மாமழை (3) மந்தமாருதம் (4) பவனம்

(4) ‘தம் நண்பரைத் தூற்றுவர்’ இங்கு **தூற்றுவர்** என்பதன் எதிர்க்கருத்து
(1) சாடுவர் (2) ஏசுவர் (3) பேசுவர் (4) போற்றுவர்

(5) ‘எத்தனை பராக்கள் என்று கச்சிதமாகச் சொல்லிவிடும்’ **கச்சிதம்** என்பது
(1) சரியாக (2) எழுந்தமானமாக (3) பருமட்டாக (4) கிட்டத்தட்ட

❖ **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(6) பொருட் தொடர்பின் அடிப்படையில் நோக்கும்போது வேறுபட்டு நிற்கும் சொற்களின் இணைவு
(1) தையல்-பெண் (2) கள் - தேன் (3) வெகுளி - சாந்தம் (4) கா - தண்டலை

(7) ஒரே பொருளைக் குறிக்கும் சொற்களைக் கொண்ட தொகுதி
(1) மா, பரி, வாரணம் (2) முருகு, அழகு, கவின்
(3) வேலை, வாரிதி, தழல் (4) மலை, வெற்பு, அடவி

(8) மன்னர்களால் செய்யப்படும் சிறப்பு
(1) சங்கநிதி (2) நிந்தகம் (3) மாராயம் (4) ஓலக்கம்

(9) Census என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகராகத் தமிழில் வழங்கும் கலைச்சொல்
(1) மதிப்பீடு (2) தொகைமதிப்பு (3) கணிப்பீடு (4) பாதீடு

(10) பிறப்பினிலேயே ஞானமுடையவன் என்ற பொருளைத் தரும் அருஞ்சொற்றொடர்
(1) மெய்ஞான மேதை (2) நுண்மான் நுழைபுலம்
(3) கருவிலே திருவுடையோன் (4) சீர்த்தகு குணத்தோன்

(11) யாவருக்கும் வசப்படக்கூடியவன் என்பதைக் குறிக்கும் மரபுத்தொடர்

(1) எடுப்பார் கைப்பிள்ளை (2) மறுத்தோடி நிற்பான்

(3) இருதலைக் கொள்ளி (4) பதற்றக்காரன்

(12) ஒன்றினது முக்கியத்துவத்தை உணர்த்தும் பழமொழியாக அமைவது.

(1) கனிந்த பழம் தானே விழும் (2) இக்கரைக்கு அக்கரைப் பச்சை

(3) இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது (4) அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது

(13) ஒன்றுமட்டும் பொருளுடையதாய் ஒத்தோசைச் சொற்களாலான இணைமொழி

(1) போற்றித்தூற்றி (2) அமளிதுமளி (3) சீருஞ்சிறப்பும் (4) பரவிப்பரந்து

(14) மலையகப் பிரதேச வழக்குச் சொல்லாக அமையாதது

(1) சிறாம்பு (2) வெரசா (3) எலை (4) பொழப்பு

(15) ‘உலகம் ஆயிரம் சொல்லட்டும்’ இதில் இடம்பெற்றுள்ள ஆகுபெயர்

(1) பொருளாகுபெயர் (2) காலவாகுபெயர் (3) சினையாகுபெயர் (4) இடவாகுபெயர்

16. காய்தல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லாக அமைவது

(1) மலர்தல் (2) வாடுதல் (4) உவத்தல் (4) பழுத்தல்

17. எழுபத்தைந்தாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா

(1) பொன்விழா (2) பவளவிழா (3) வைரவிழா (4) வெள்ளிவிழா

18. **பொருத்தமற்ற** சொல்லைக் கொண்ட தொகுதி

(1) குட்டி : பாம்பு, ஆடு, புலி

(2) பிள்ளை : மக்கள், கிளி, எருமை

(3) திரள் : உடு, சேனை, சனம்

(4) குவியல் : நெல், முத்து, எறும்பு

19. கிணற்றிலிருந்த தண்ணீர் தெள்ளத் தெளிந்து காணப்பட்டது- இங்கு தெள்ளத் தெளிந்து என்பது

(1) இணைமொழி (2) அடுக்குத்தொடர்

(3) இரட்டைக்கிளவி (4) அடுக்கிடுக்குத் தொடர்

20. பிச்சை, சந்தேகம், இரத்தல் என்னும் பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல்

(1) ஐயம் (2) உரம் (3) நகை (4) அரை

❖ **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. ககர மெய் ஒலிப்பால் வேறுபட்ட வகையில் இடம்பெறும் சொல்

(1) பங்கம் (2) பாகம் (3) மேகம் (4) விரகம்

22. எதிர்கால இடைநிலை இடம்பெற்ற சொல்

(1) போனது (2) வரும் (3) தருவான் (4) எழுதும்

23. உடனிலை மெய்ம்மயக்கம் இடம்பெற்ற சொல்

(1) அரசன் (2) புத்தகம் (3) மண்மேடு (4) பலகணி

24. இயல்புப் புணர்ச்சி இடம்பெற்றுள்ள சொல்

(1) மட்குடம் (2) தேருருளை (3) துணைப்படை (4) வானவில்

25. இடைச்சொல்லாக அமையும் சொல்

(1) நட (2) நகரம் (3) போல (4) மலர்

26. மூன்றாம் வேற்றுமை 'ஓடு' உருபு கலப்புறு பொருளில் இடம்பெற்றுள்ள தொடர்

(1) மக்களோடு மக்களாக வந்தான் (2) கோபத்தோடு பேசினான்

(3) பாலோடு நீர் கலந்தான் (4) தம்பியோடு சென்றேன்

27. பின்வருவனவற்றுள் இருபெயரொட்டுப் பண்புத்தொகை

(1) கிளிப்பேச்சு (2) வருபுனல் (3) மூவுலகு (4) சுறாமீன்

28. அகராதி ஒழுங்கில் அமைந்துள்ள சொற்றொகுதி

(1) மலை, மாணவன், காற்றாலை, குயில் (2) இலை, ஆவணம், இதயம், ஐயம்

(3) பாலம், பாடல், பெட்டி, பீடம் (4) குருவி, சாதகம், தண்ணீர், தாயம்

❖ **பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவுசெய்க.**

29. (1) தனிவினை : விழுந்தான், படிக்கிறான், பறந்தது

(2) கூட்டுவினை : கேள்விப்பட்டான், வந்திருந்தான், ஓடப்பார்த்தான்

(3) தன்வினை : உண்டாள், மேய்ந்தது, பாய்கின்றது

(4) பிறவினை : செய்வித்தாள், படிப்பித்தார், பாடினார்

30. (1) ஆக்கப்பெயர் : முயற்சி, எழுத்தாளர், படிப்பு

(2) கூட்டுப்பெயர் : குருவிக்கூடு, வானவில், பாற்காரி

(3) தொழிற்பெயர் : காணுதல், போகாமை, மயங்கல்

(4) மாற்றுப்பெயர் : நீ, அவன், நான்

❖ **புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க**

31. மேற்கு நாடுகள் பலவற்றில் தனியொருவர் வைத்திருக்கக்கூடிய சொத்துக்கு ........................ விதிக்கப்பட்டுள்ளது.

(1) உச்சநிலை (2) உச்சக்கட்டம் (3) உச்சவரம்பு (4) உச்சச்சட்டம்

32. கல்வியமைச்சு தமிழ்த்தினப் போட்டிகள் தொடர்பான........................... பாடசாலைகளுக்கு அனுப்பிவைத்தது.

(1) அறிக்கையை (2) சுற்றுநிருபத்தை (3) பிரேரணையை (4) தீர்மானத்தை

33. பாழடைந்தநிலையிலிருந்த சந்தைக் கட்டடத்தை மாநகரசபை .......................... செய்தது

(1) அங்குரார்ப்பணம் (2) புனர்நிர்மானம் (3) சீர்திருத்தம் (4) அரங்கேற்றம்

34. அரசாங்கம் புராதன பொருட்களைச் சேகரித்து வைக்கும்.............................. பராமரிப்பதற்கு அதிகளவு நிதியைச் செலவிடுகிறது.

(1) நூதனசாலைகளை (2) சுவடிச்சாலைகளை (3) சாட்சிச்சாலைகளை (4) பண்டசாலைகளை

❖ **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

35. நீங்கள் இருவருந்தான் அங்கிருந்தீர்கள். எனவே நீங்கள்தான் அதைச் ................................

(1) செய்யவேண்டும் (2) செய்யவீர்கள் (3) செய்யலாம் (4) செய்திருக்கவேண்டும்

36. வேட்பாளர்கள் ஒவ்வொரு வீடுவீடாகச் சென்று துண்டுப்பிரசுரத்தை ....................................

(1) வழங்கியது (2) வழங்கும் (3) வழங்கினார்கள் (4) வழங்கினான்

❖ கீழே தரப்பட்டுள்ள கவிதையை அடிப்படையாகக் கொண்டு 37 தொடக்கம் 39 வரையான வினாக்களுக்கு விடை தருக.

கானெலாம் மலர்ந்த முல்லை
ககனமீ தெழுந்த தென்ன
வானெலாம் வயங்கு தாரை
நிரை நிரை மலர்ந்து தோன்ற
வேனிலான் விழாவின் வைத்த
வெள்ளிவெண் கும்ப மென்னத்
தூ நிலா மதியம் வந்து
குணதிசை தோன்றிற் றம்மா

37. இக் கவிதையில் கவிஞர் வருணிக்கும் காட்சி யாது
(1) சந்திரோதயக் காட்சி (2) வேனில் விழாக்காட்சி
(3) மதியக் காட்சி (3) சூரியஸ்தமனக்காட்சி

38. தாரை எதைப்போல விளங்கியது எனக் கவிஞர் கூறுகின்றார்
(1) நிலா (2) வெள்ளி (3) கும்பம் (4) முல்லை

39. ''வெள்ளிவெண் கும்பமென்னத் தூ நிலா மிதியம்'' இதில் இடம்பெற்றுள்ள அணி யாது?
(1) உயர்வுநவிற்சி (2) உருவக அணி (3) உவமையணி (4) தற்குறிப்பேற்ற அணி

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெறவைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

(அ) எனினும் விஞ்ஞானம் முன்னேறிவரும் அசுர வேகத்தைப் பார்க்கும் போது அது அவர் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே வந்துறலாம் எனத் தோன்றுகிறது.

(ஆ) அவ்வாறு அத்தகையதொரு சமுதாயம் மிக விரைவில் உருவாகினாலும் ஆச்சரியப்படு-வதற்கில்லை.

(இ) ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு எச். ஜீ வெல்ஸ் எனும் அறிஞர் ''கால எந்திரம்'' எனும் கற்பனைக் காவியத்தை எழுதினார்.

(ஈ) அத்தகைய சமுதாயம் எண்ணூறாயிரம் வருடமளவில் உலகில் உருவாகலாம் எனத் தேதியிட்டார்.

(உ) அதில் சிதைந்த ஒரு சமுதாயத்தை உருவகித்துக் காட்டியுள்ளார்.

(1) இ , உ , ஈ , அ , ஆ (2) அ , ஆ , ஈ , இ , உ
(3) இ , ஈ , உ , அ , ஆ (4) உ , ஈ , அ , இ , ஆ

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை - 2023

| தரம் - 11 | தமிழ்மொழியும் இலக்கியமும் - II | |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ........................................................................

அறிவுறுத்தல்கள்

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

(01) சுருக்கமான விடை தருக.

(i) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
'கைவீரக் களிறனைய காளையிவன்'

(ii) 'அதைப் பார்த்தால் கொன்றுவிட வேண்டும் என்ற கடமை உணர்வு எனக்கு வந்துவிடும்'
-இந்த வாக்கியத்தின் எழுவாய், பயனிலைகளைக் குறிப்பிடுக.

(iii) பின்வரும் பேச்சுவழக்குத் தொடரை எழுத்து வழக்கில் தருக.
'மகேன் ஒனக்கு நன்ம கெடக்கும்'

(iv) 'உழைப்பால் மாந்தர் உயர்வர் என்பது ஆன்றோர் வாக்காகும்'
-இத்தொடரின் தலைமைத்தொடர், சார்புத்தொடரை எழுதுக.

(v) 'கம்பர் உலகம் போற்றும் ஒப்பற்ற காவியத்தை எமக்களித்தார்.'
-செயப்பாட்டுவினை வாக்கியத்தை செய்வினை வாக்கியமாக மாற்றுக.

(vi) 'ஒவ்வொரு மணிகளாக எடுத்து மாலை தொடுத்தான்'
-இவ் வாக்கியத்தை வழு நீக்கி எழுதுக.

(vii) 'இரை' என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்க வகையில் ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

(viii) பின்வரும் வாக்கியத்தை பொருத்தமான நிறுத்தக்குறிகளுடன் எழுதுக.
விட்டிர்ராதே விட்டிர்ராதே பிடி என்று கத்தினேன்

(ix) 'கண்ணனது கை' என்பது எவ்வகைத் தற்கிழமையாகும்.

(x) 'கங்கணங் கட்டுதல்' என்ற மரபுத்தொடரின் கருத்துப்புலப்படுமாறு வாக்கியம் எழுதுக.

(20 புள்ளிகள்)

(02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து, ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக.
நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான **தலையங்கம்** இடுக.

**(i)** நாட்டின் பொருளாதாரம் பெருவீழ்ச்சி கண்டுள்ள நிலைலையில் நாட்டிலிருந்து மூளைசாலிகளும் முதலீட்டாளர்களும் வெளியேறத் தொடங்கியிருப்பது நாட்டை மேலும் பொருளாதாரப் பின்னடைவுக்கே இட்டுச் செல்லும். நாட்டைக் கட்டியெழுப்பவேண்டிய பொறுப்பு முதலீட்டாளர்களுக்கும் மூளைசாலிகளுக்குமுள்ளது. இவர்களின்

வெளியேற்றத்துக்கான காரணங்களைச் சரியான முறையில் அரசாங்கம் அணுகி அதைத் தடுப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளவேண்டும் அதன் மூலமே நாட்டை மீளவும் கட்டியெழுப்ப முடியும். இந்த விடயங்களை வலியுறுத்துவதற்கான ஒரு **விளக்கக் கட்டுரை.**

**(ii)** மதம் என்பது மனிதனை நல்வழிப்படுத்துவதற்கு உருவாக்கப்பட்டதாகும். மதத்தை அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கான கருவியாகப் பயன்படுத்த முற்பட்டால் அது மக்களுக்கிடையே முரண்பாடுகளைத் தோற்றுவித்து, புரிந்துணர்வுடன் கூடியதான சமாதான வாழ்வைப் பாதிப்பதாக அமைந்துவிடும். அரசும் சரி மத அமைப்புக்களும் சரி இந்தப் புரிதலுடன் செயற்படுவதன் மூலமே நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்பதை வலியுறுத்தும் ஒரு **மேடைப்பேச்சு.**

**(iii)** நாட்டில் இன்று தனியார் வைத்தியசாலைகளின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே செல்கின்றது. சுகாதாரத்துறை இலவசமானது என்ற நாட்டின் கொள்கையை இது கேள்விக்குள்ளாக்கியுள்ளது என்று கருதும் ஒருவருக்கும் தனியார் வைத்தியசாலைகளின் பெருக்கம் தவிர்க்க முடியாத ஒன்றாகும், அது நாட்டின் வளர்ச்சிப் போக்கை மேம்படுத்துவதோடு சுகாதாரத் துறையையும் வளப்படுத்தும் என்று கருதும் ஒருவருக்கும் இடையிலான **உரையாடல்.**

**(iv)** அந்தச் செய்தியை அறிந்ததிலிருந்தே காந்தனின் மனம் துக்கத்தில் ஊசலாடிக்கொண்டிருந்தது. தன்னை ஆளாக்கி இந்த உயரத்துக்கு உயர்த்திவிட்ட தந்தையின் அருகில் தான் இல்லாததை நினைக்கும் போது எரியில் விழுந்து கருகும் தளிரென அவன் மனம் வெந்துகொண்டிருந்தது. பொருள் ஈட்டுவதை பெரிதெனக் கருதி வாழ்க்கையில் எத்தனையோ சந்தோசங்களை இழந்துவிட்டிருந்த அவனுக்கு அந்தச் செய்தி பேரிடிதான். கண்களை மூடி சில கணங்கள் யோசித்தவன் தீர்க்கமான முடிவுடன் கண்களைத் திறந்துகொண்டான். இதனை அடிப்படையாகக்கொண்டு **சிறுகதை**

(25 புள்ளிகள்)

(03) பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 40-45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

கலை இலக்கியங்கள் எவ்வளவுக்கு முக்கியத்துவம் பெற்றுள்ளனவோ அதேயளவுக்கு விமர்சனங்களும் அவசியமானவையாகக் கருதப்படுகின்றன. ஆயினும் தமிழில் கலை இலக்கியங்கள் வளர்ந்த அளவோடு ஒப்பிடுகையில் விமர்சனக் கலைபோதியளவு வளர்ச்சி பெறவில்லை என்ற குறை நிலவி வருவதை அவதானிக்கலாம். விமர்சனம் குறித்து பல நூல்கள் வெளிவந்தபோதும் அது பற்றிய போதுமான புரிதலின்மை இன்னமும் உள்ளது. படைப்பாளிக்கும் வாசகருக்குமிடையில் தொடர்பை வலுப்படுத்துவதோடு மேலதிக விளக்கங்களை ஏற்படுத்துவதாயும் விமர்சனம் திகழ வேண்டும். இந்த முயற்சி போதியளவு வெற்றிபெறாத காரணமாயும், அதற்குத் தடையாக படைப்பாளர்கள் விமர்சனத்தைக் கண்டு சீற்றம் கொள்ளும் பக்குவமின்மைகளாலும் விமர்சனக் கலை வளர்ச்சி பெற இயலாதுள்ளது.

ஆக்கங்கள் அனுபவச் செழுமைகளை உணர்வெழுச்சியுடன் வெளிப்படுத்துவன. வாழ்விலிருந்து பிறந்து ஏனையவர்களது வாழ்வைச் செப்பனிட ஏற்றதாக படைப்பாக்கம் மிளிர்கிறது என்ற வகையில் அவை குறித்த கருத்துகள் சமூகத்தில் உணர்வைத் தூண்டும் சிறு பொறிகள் போன்ற பண்புடையன. நல்ல படைப்புகள் மனித உணர்வுக் காட்டின் தீமைகளை எரிக்கும். கேடானவை மனித சமூகத்தையே வெந்து சாம்பலாய் நாசமாக்க வல்லன. அவை குறித்த விமர்சனங்கள் பக்கச் சார்பின்றி துணிச்சலுடன் வெளிப்பட அவசியமுள்ளன.

தமிழின் மரபுரீதியான விமர்சனத்துக்கு உதாரணமாகக் கூறப்படும் நக்கீரன் கதை இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. தருமிக்கு பொற்கிழி வழங்க வேண்டும் என்பதற்காக இறைவனே பாடலை எழுதிக் கொடுக்கிறார். பாடலில் தவறிருப்பதாக நக்கீரர் கூற, இறைவனையே சபைக்கு அழைத்து வருகிறார் தருமி.நெற்றிக் கண்ணைக் காட்டியபோதும் அச்சங்கொள்ளாத நக்கீரன் “குற்றம் குற்றமே” என இடித்துரைக்கிறார். திருவிளையாடற் புராணத்தில் இடம்பெறும் இக்கதை குறித்து வாதப்பிரதிவாதங்கள் காணப்பட்ட போதிலும் விமர்சகர்களுக்கு இருக்க வேண்டிய அஞ்சாமைக்கு உதாரணமாக எப்போதும் இது முன்வைக்கப்படுவதுண்டு.

(10 புள்ளிகள்)

(03) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

தம்மை சுற்றி நடப்பவை அனைத்தையும் கூர்ந்து அவதானித்து, அவற்றில் நிலவும் இயற்கை ஒழுக்கைக் கண்டு தெளிந்து அவற்றில் இருந்து இலக்கணம் வரையும் பண்பினைக் கொண்டிருந்த பழந்தமிழ் சமூகம் நம்முடைய மானுட வாழ்வையும் ஒவ்வொரு கட்டங்களாக வகைப்படுத்தியும், நெறிப்படுத்தியும் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். தனிநபர் ரீதியிலும், குடும்ப மட்டத்திலும், சமூக அளவிலும் இரு தனியாட்கள் ஒன்றாக இணைந்து ஒரு வாழ்க்கையை முன்னெடுத்தல் என்பது இன்றியமையாத பாகமாகப் பார்க்கப்பட்டது. எனவே இருவர் இணைந்து நடாத்தும் இல்லறத்துக்கென நெறிமுறைகள் வகுத்தாயின. அந்த நல்லில்லறத்துக்கு ஆதாரமாய் விளங்கும் அன்பும், காதலும் மனித கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்ட இயற்கையின் நியதி என்று அமைந்த போதிலும், அவ்வியற்கையின் வெவ்வேறு படிநிலைகள், மற்றும் இயல்புகள் பற்றிய புரிதல்களும், பழக்கங்களும் நம் முன்னோர்களால் குறித்து வைக்கப்பட்டது. நம் அன்னைத் தமிழுக்கு இலக்கணம் வரைந்த அதே தொல்காப்பியம் தான் வாழ்க்கை ஆண்-பெண் உறவுக்கும் இலக்கணம் கூறுகிறது. இதிலிருந்தே தமிழ் எனும் அடையாளமானது நம்முடைய வாழ்வியலில் எவ்வாறு பின்னிப்பிணைந்துள்ளது என்பது ஆதாரமாகிறது.

முதலில் தொல்காப்பியம் பற்றி சிறிது தெளிவோம். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த தொல்காப்பியர், தான் எழுதிய தொல்காப்பிய இலக்கண நூலினை மூன்று அதிகாரங்களாகப் பகுத்துள்ளார் எழுத்துகள் பிறந்தது முதல் அவை ஒன்றோடொன்று இணைந்து மொழியாகும் தன்மைகளைக் கூறும் எழுத்ததிகாரம், இவ்வெழுத்துகள் சொல்லாகி, அச்சொற்கள் அமையும் பாகுபாடுகள், அவற்றின் பெயர் வகைகள் முதலியவற்றைக் கூறும்

சொல்லதிகாரம், இச்சொற்கள் இணைந்து பல்வேறு பொருள்களை உணர்த்தும் பொருளதிகாரம். சொற்களுக்கான பொருளை மாத்திரம் கூறுவது மாத்திரம் பொருளதிகாரத்தின் இயல்பல்ல, பொருளதிகராமே நம் வாழ்வியல் கூறுகளைப் பற்றியும் கூறுகிறது.

(i) பழந்தமிழ்ச் சமூகம் கொண்டிருந்த பண்பு யாது?

(ii) இன்றியமையாத பாகமாகப் பார்க்கப்பட்ட விடயம் எது?

(iii) இல்லறத்துக்கு ஆதாரமாக விளங்குபவை எவை?

(iv) தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களும் எவை?

(v) இப்பந்தியின் மூலம் ஆசிரியர் கூறவரும் விடயம் யாது?

(10 புள்ளிகள்)

(04) சுப்பிரமணியபுரம் கிராமம் பழம்பெரும் கலைகளைப் பேணிவளர்த்துவரும் கிராமமாகும். முதுபெரும் கலைஞர்கள் பலரும் இன்றும் தம் கலையார்வத்தைக் கைவிடாது அடுத்த தலைமுறைக்குக் கலைகளைக் கையளிப்பதற்காக தொடர்ந்தும் பாடுபட்டுவருகின்றனர். எனினும் அந்தக் கலைஞர்களது வாழ்வாதாரம் கட்டியெழுப்பப்படாத நிலையே இன்னும் காணப்படுகின்றது. கலைஞர்களை மதிக்கின்ற கொண்டாடுகின்ற சமூகமே உயிர்ப்புள்ள சமூகமாக இருக்க முடியும். கலைகளே மனிதர்களிடம் மாண்பினை கட்டிவளர்க்கின்றது. எனவே அத்தகைய கலைகளை காத்துவருகின்ற கலைஞர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி கிராமத்தின் கலை பண்பாட்டுக் கழகத்தின் செயலாளர் திரு. கு.இளவேனிலன் என உம்மைக் கருதி உமது பிரதேச செயலகத்தின் செயலாளருக்கு 100 சொற்களில் கடிதம் ஒன்று எழுதுக.

அல்லது

நாளுக்குநாள் சமூகத்தில் குற்றச் செயல்கள் பெருகிக்கொண்டே இருக்கின்றன. மனிதன் அறிவியல் ரீதியாக எவ்வளவுதான் முன்னேற்றம் கண்டாலும் அனைத்திலும் மேலானது ஒழுக்கப்பண்புகளே. மாணவர்களிடம் ஒழுக்கத்தை கட்டிவளர்ப்பதில் பாடசாலைக்கு மட்டுமன்றி சமூகத்தில் வாழுகின்ற ஒவ்வொரு பிரசைக்கும் முக்கியமான பங்கிருக்கின்றது. அனைவரினதும் கூட்டிணைவினாலையே குற்றச் செயல்களைக் தடுக்கமுடியும். மக்களிடம் இதுபற்றிய வழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக சுப்பிரமணியபுரம் இளைஞர் மேம்பாட்டுப் பேரவை சார்பாக 100 சொற்களில் துண்டுப்பிரசுரம் ஒன்று எழுதுக.

(15 புள்ளிகள்)

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை - 2023

| தரம் - 11 | தமிழ்மொழியும் இலக்கியமும் - III | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................

அறிவுறுத்தல்கள்:

- அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
- 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7, ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

(01) சுருக்கமான விடை தருக.

(i) ‘‘தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும்’’

அ) தெண்ணீர் என்பதைப் பிரித்து எழுதுக?

ஆ) கயம் என்பதன் பொருள் யாது?

(ii) ‘‘போத மூன்று நலம் செயு நாடு’’

அ) போதம் மூன்றும் எவை?

ஆ) இங்கு குறிப்பிடப்படும் நாடு எது?

(iii) ‘‘மேழி பெருகவேணும் தம்பிரானே’’

அ) தம்பிரான் எனப்படுபவர் யார்?

ஆ) மேழி என்பது தரும் இருபொருள்களைத் தருக?

(iv) ‘‘அவர் தமது வலியை அங்கவஸ்திரத்தில் ஆவாகனம் பண்ணி பக்கத்தில் வைத்துவிட்டு பாடம் சொல்லுவது வழக்கம்’’

அ) இங்கு அவர் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

ஆ) அங்கவஸ்திரம் என்றால் என்ன?

(v) ‘‘அதன் வீரப்பிரதாபங்களைப் பற்றி ஒரு பரணி பாடினார்’’

அ) வீரப்பிரதாபங்கள் என்பதன் கருத்து யாது?

ஆ) பரணி என்றால் என்ன?

(vi) ‘‘ஐவீரு மொருவீரா யகலிடத்தை நெடுங்கால மளித்தி ரென்றாள்’’

அ) இவ்வாறு கூறியவர் யார்?

ஆ) ஐவீர் எனக் குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?

(vii) ‘‘யாத்த தேருரு ளைப்படு மேழைதான்
யாண்டு தேர் செலு மாங்கிழுப் புற்றென’’

அ) யாண்டு என்பதன் கருத்து யாது?

ஆ) இதில் வந்துள்ள அணி யாது?

(viii) ‘‘வெங்கட் பிறைகருங் கரும்பிறைக்கும்

மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே?

அ) ‘பிறை’ எனும் சொல் தரும் மூன்று பொருள்களும் எவை?

ஆ) இதில் வந்துள்ள அணி யாது?

(ix) ‘‘பெரிதுஇனிது பேதையார் கேண்மை பிரிவின்கண்

பீழை தருவது ஒன்று இல்’’

அ) கேண்மை என்பதன் எதிர்க்கருத்து யாது?

ஆ) பேதையாரடையும் இழிவுநிலையை எடுத்துக்காட்டுக?

(x) ‘‘திருவருட் பயனை விடுத்து திருவருளை வழுத்தி ஆனந்தமடைகிறார்’’

அ) ஆனந்தமடைந்தவர் யார்?

ஆ) வழுத்தி என்பதன் கருத்து யாது?

(02 x 10 = 20 புள்ளிகள்)

1. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து, அவற்றின்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவைபோல்

தப்பிய கந்தைபீ தாம்பரம்போல்- ஒப்பும்

பனையோலைப் பாயில் படுத்துறங்கும் வாழ்வார்

மனங்கொண் டதுமா ளிகை

அ) இதிலுள்ள முதுமொழி எது? அதன் கருத்து யாது?

ஆ) வாழ்வார் என்போரின் இயல்புகளாகக் கூறப்பட்டிருப்பவற்றை விளக்குக?

(ii) சூழு மாய வுலகினிற் காணுறுந்

தோற்றம் யாவையும் மானத மாகுமால்

ஆழு நெஞ்சகத் தாசையின் றுள்ளதேல்,

அதனு டைப்பொருள் நாளை விளைந்திடும்,

தாழு முள்ளத்தர், சோர் வினர், ஆடுபோல்

தாவித் தாவி பலபொருள் நாடுவோர்,

வீழு மோரிடை யூற்றினுக் கஞ்சுவோர்,

விரும்பும் யாவும் பெறாரிவர் தாமன்றே

அ) விரும்பியதை அடையமுடியாதவர்களின் இயல்புகள் யாவை?

ஆ) இதிலிடம்பெற்றுள்ள அணியை விளக்குக?

(iii) தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்துஇன் புறாஅர் ஆயினும் கையின்
ஈர்த்துஇன் புறூஉம் இளையோர் போல்
உற்றுஇன் புறேஎம் ஆயினும் நற்றேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்துஇன் புற்றனெம் செறிந்தன வளையே

அ) தலைவனின் சிறப்பு யாது?

ஆ) இதில் கையாளப்பட்டுள்ள உவமையை விளக்குக?

(iv) சினிமா மொழியின் மூன்றாவது முக்கிய அம்சம் படத்தொகுப்பு (Editing) தனித்தனியாக ஒலிப்பதிவு செய்யப்பட்ட காட்சிப்படிமங்களும், ஒலிப் பதிவுகளும், ஒரு அர்த்தமுள்ள கோர்வையாக அமைக்கப்படுவது. இதை சினிமா இலக்கணத்திற்கு அடித்தளம் எனலாம். எப்படி இந்தக் கோர்வை அமைகிறதோ அந்த விதத்திலேயே அந்த நிகழ்ச்சித் தொடரின் அர்த்தமும் மாறும்.

அ) படத்தொகுப்பு என்பது யாது?

ஆ) படத்தொகுப்பின் முக்கியத்துவம் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?

(v) முப்பத்தாறு பக்கத்தையும் சாப்பிட்டு ஏப்பம் விட்டுவிட்டு ஒன்றும் தெரியாத அப்பாவிபோல என்னைப் பார்த்தது. எனக்கு சாட்சிக்குகூட ஒருவருமில்லை. துருவித் துருவித் தேடினேன். என்னுடைய யுக்தி ஒன்றும் பலிக்கவில்லை. அந்த கோப்பு இருந்த சிலமன்கூட இல்லை. எனக்கு அழுகை வந்துவிடும் போல் இருந்தது. “தொலை“என்ற தலைப்பில் நான் கணிப் பொறியில் எழுதிய முதல் கதை உண்மையிலேயே தொலைந்து போய்விட்டது. ஒரு ஏழைப்புலவர் அவருடைய பரம்பரைச் சொத்து ஒரு பாக்குவெட்டி. உயிருக்கு அடுத்தபடி அவருக்கு அதுதான் எல்லாம். விறகு வெட்ட, கறி நறுக்க, பாக்குச்சீவ என்று எல்லாத்துக்கும் அதைத்தான் நம்பியிருந்தார். ஒருநாள் அதைக் காணவில்லை. புலவருக்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. தேடு தேடு என்று தேடினார்.

அ) கதை தொலைந்ததால் கதாசிரியர் அடைந்த துயர் எவ்வாறு காட்டப்படுகிறது?

ஆ) ஏழை புலவரின் அனுபவத்துடன் தன் அனுபவத்தை தொடர்புபடுத்துவதிலுள்ள சிறப்பை விளக்குக?

(4 x 5 = 20 புள்ளிகள்)

2. **குற்றாலக்குறவஞ்சியில்,**

(அ) மலைவாழ் மக்களின் வாழ்வியல் அம்சங்கள்
(ஆ) அணிகளின் பயன்பாடு
ஆகியன வெளிப்படுமாற்றினை விளக்குக.

அல்லது

**எது நல்ல சினிமா** என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துக.
(அ) சினிமாவில் நாடகத்தின் செல்வாக்கு
(ஆ) சினிமாமொழி பற்றிய கட்டுரையாசிரியரின் கருத்துக்கள்

3. **பேதைமை** என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
   (அ) பேதையின் செயல்கள்
   (ஆ) உவமையணியின் பொருத்தப்பாடு

   அல்லது

   **நாவலர் எழுந்தார்** என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துக.
   (அ) தலைப்பின் பொருத்தப்பாடு
   (ஆ) கட்டுரையாசிரியர் கையாண்டுள்ள உத்திகள்

- 5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.

4. 'பங்க பழனத் துழுமுழவர்' எனத் தொடங்கும் **தனிபாடலை** அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
   (அ) சோழ நாட்டின் சிறப்பு
   (ஆ) தலைவியின் துயர்

5. (அ) 'கழியும் பிழைபொருட் டள்ளி' என்ற பாடலில் காளமேகப் புலவரின் கவியாற்றல்

   (ஆ) 'ஆடிக் குடத்தடையு மாடும்போதே..' என்ற பாடலில் சிலேடையணிப் பயன்பாடு
   என்பனவற்றை விளக்குக.

6. இலட்சியமும் சமநோக்கும் என்ற கட்டுரையில்
   (அ) வேண்மாளின் சமநோக்கு
   (ஆ) தசரதனின் இலட்சியம்
   ஆகியனவற்றைத் தெளிவுபடுத்துக.